கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.148/2011** தேதி: **18.11.2025**

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 (தேவகி, க/பெ.செந்தில்குமார்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(1) வழக்கு விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் கோப்புகளைப் பார்த்தால் தெரியும். கூடுதல் பிரமான வாக்குமூலத்தினை நான் சொல்லி தான் தயார் செய்தார்கள் என்றாலும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றாலும் சரிதான். அசல் வழக்கு எண் 473/2010 உள்ள சொத்தானது சர்வே எண் 2669/1 ல் உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 140/2011, 539/2010, 148/2011, 255/2010 , 80/2010 ஆகிய வழக்கில் உள்ள சொத்தின் சர்வே எண் 2669/4 என்றால் சரிதான். மேலும் சர்வே எண் 2669/5 லும் உள்ளது.

(2) அசல் வழக்கு எண் 255/2010 ஆனது நாங்கள் இருசம்மாள் என்பவர் மீது தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் தாக்கல் செய்த சொத்தின் சர்வே எண் 2669/4 என்று மட்டும் தான் உள்ளது என்றாலும் சர்வே எண் 2669/5 இல்லை என்றாலும் சரிதான். அதேபோல் அசல் வழக்கு எண் 80/2010 ஆனது சுசி என்பவர் மீது நாங்கள் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அதிலும் வழக்கு சொத்தின் சர்வே எண் 2669/4 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(3) நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ.6 மற்றும் 7 என்ன ஆவணம் மற்றும் அது யார் யார் மீது தாக்கல் செய்த வழக்கு என்றால் அமுதா என்பவர் கோயில் மீது

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.11.18 18:03:01 +0530

தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஆகும். இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கானது கீழமை நீதிமன்றங்களில் தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கு எண் 134/2010 முதன்மை சார்பு நீதிமன்ற தீர்ப்பாணைக்கு மற்றும் மேல்முறையீடு வழக்கு எண் 66/2016 முதன்மை மாவட்ட நீதிமன்ற தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(4) பி.த.சா.ஆ.7 ஆனது எந்த வழக்கு சொத்திற்காக பகரப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 2669/1 மற்றும் 2669/3 க்கு பகரப்பட்டுள்ளது. சர்வே எண் 2669/4 அந்த தீர்ப்பாணையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேல்முறையீட்டு தீர்ப்பில் அமுதா மட்டும் தான் தரப்பினர் என்றாலும் அசல் வழக்கு எண் 473/2010 ன் வாதியான சின்னத்தம்பி தரப்பினராக இல்லை என்றாலும் சரிதான்.

(5) நான் கீழமை நீதிமன்றத்தின் உத்தரவைப்பற்றியும் மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பைப்பற்றியும் எனது வழக்குறையில் நான் குறிப்பிடட்டுள்ளேனா என்றால் இல்லை. கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் கோப்புகளைப் பார்த்துதான் தெரிந்துக் கொண்டேன். சுமார் 1 வருடம் இருக்கும். அசல் வழக்குஎண் 473/2010 ல் உள்ள வா.த.சா.ஆ. 3 ஆனது 12.03.1998 அன்று சின்னத்தம்பி கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். இதில் வழக்கு சொத்தின் சர்வேஎண் 2669/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1998 முதல் கிரையம் பெற்ற தேதியில் இருந்து அந்த வழக்கு சொத்தானது சின்னத்தம்பி மற்றும் அவரது குடும்பத்தினரின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

(6) சின்னத்தம்பியின் அனுபவத்தில் இருக்கும் போதே அமுதாவின் மீது அசல்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.11.18 18:03:05 +0530

வழக்கு எண் 134/2010, முதல் மற்றும் இரண்டாம் மேல்முறையீடு வழக்குகள் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். சின்னத்தம்பியை நாங்கள் தரப்பினராக சேர்க்காமல் பெறப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பணையான பி.த.சா.ஆ. 6 மற்றும் 7 ஆனது அவரை எந்த காலத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இரண்டாவது மேல்முறையீட்டு தீர்ப்பானது சின்னத்தம்பிக்கு உரிய சொத்திற்கு சம்மந்தப்பட்ட தீர்ப்பு என்றாலும் வேறுசொத்திற்கு சம்மந்தப்பட்டதல்ல என்றாலும் சரியல்ல.

(7) மேல்முறையீட்டு உத்தரவு சின்னத்தம்பியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றாலும் அவர் வழக்கு சொத்தினை 1998 லேயே கிரையம் பெற்றுவிட்டார் என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.11.18 18:03:08 +0530

***Additional District Munsif , Cuddalore.***